
# தண்ணீருக்காக
# ஒன்று கூடி...




**கஸ்பர் அப்பாவு**



Foundation for Ecological Research, Advocacy and Learning

# தண்ணீருக்காக ஒன்று கூடி...

கஸ்பர் அப்பாவு

Foundation for Ecological Research, Advocacy and Learning

Copyright © 2004
Foundation for Ecological Research, Advocacy and Learning

Publisher:
Foundation for Ecological Research, Advocacy and Learning
Post Box 28
Pondicherry - 605001, India.

Email: feral@satyam.net.in
web: www.feralindia.org

Cover Photograph: © 2004 Srinivas V.

Illustration: Visu

Design: Gopinath S

Printed at:
Sri Anirudh Creations
144, “Eeshavasyam”, 6th Main Road, Gururaja Layout,
Bangalore - 560 028

Financial Assistance:

ICEF
No: 86, Paschim Marg
Vasant Vihar
New Delhi -110 054.
www.icefindia.org

# நன்றி

*இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாக இருந்த ஐ.சி.இ.எப்.:. நிதி நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கும், பெண்கள் பட்டாதார் சங்க உறுப்பினர்களுக்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், நூலை வெளியிட நிதியுதவி அளித்த ஐ.சி.இ.எப் நிறுவனத்திற்கும், பல்மைரா மற்றும் .:பெரல் நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

# முகவுரை

ஐ.சி.எப்.:. நிதி நிறுவனத்தின் மூலம் மரக்காணம் மற்றும் வானூர் ஒன்றியங்களில் அமைந்துள்ள ஏரிகளை பராமரிப்புச் செய்யும் பொருட்டு, ஏரிப் புனரமைப்புப் பணியினை பல்மைரா என்ற அரசு சாரா நிறுவனம் செய்து வந்துள்ளது. நிலத்தடி நீரினை அதிகரித்தல், விவசாய உற்பத்தியைப் பெருக்குதல் ஏரிப் புனரமைப்புப் பணியின் முக்கிய நோக்கங்கள். இப்பணியினை மக்கள் பங்கேற்போடு இணைந்து, திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே குறிக்கோள். அதற்காக இருபதிற்கும் மேற்பட்ட சங்கங்களை அமைத்து ஏரிப் புனரமைப்புப் பணியினை ஐ.சி.எ.:ப். நிதி நிறுவனம் பல்மைரா என்ற அரசு சாரா நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றியுள்ளது. எமது .:பெரல் நிறுவனமானது இச்சங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன, மக்கள் எவ்வாறு திட்டமிடுதலில் பங்கேற்கின்றனர் போன்ற அமைப்பு ரீதியான திறனாய்வுப் பணிகளை செய்து வந்துள்ளது. இதனடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் ஒவ்வொரு ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தையும் சுய மதிப்பீடு செய்ய தயாரித்துள்ளது. ஐந்து வருடங்களாக ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த அனுபவங்களையே இந்நூலில் தொகுத்து அளித்துள்ளோம்.

# முன்னுரை

சமுதாயத்தைச் சார்ந்த சங்கங்களானது பல வகைப்படும். ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், இளைஞர் நற்பணி மன்றம் போன்றவைகள் சமுதாயத்தைச் சார்ந்த அமைப்புகளுக்கு சிறந்த உதாரணங்களாகும். இன்றைய காலக்கட்டத்தில் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற அமைப்புகள் கிராம முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய பங்காற்ற வேண்டி இருக்கின்றது. எனினும் இந்த இரண்டு அமைப்புகளின் குணாதிசயங்களும் வெவ்வேறாக உள்ளன. ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களின் முக்கிய நோக்கம் ஏரியை புனரமைப்பு செய்து அனைத்து விவசாயிகளுக்கும் சம அளவில் நீர் கிடைக்கச் செய்து விவசாயத்தினை அதிகரிப்பதாகும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் நோக்கங்கள் மகளிரிடையே சமுதாய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், சேமிப்பு பழக்கத்தினை ஏற்படுத்துதல், தங்களுக்குள் குறைந்த வட்டிக்குக் கடன் எடுப்பதன் மூலம் வெளியில் இருந்து வரும் கந்துவட்டி, தண்டல் போன்றவைகளை விரட்டுதல் போன்றவைகளாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதென்பதே இந்த அமைப்புகளின் நோக்கங்களாகும்.

## சமுதாயத்தைச் சார்ந்த அமைப்புகள் உருவாகும் தன்மைகள்


ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற சமுதாயத்தைச் சார்ந்த சங்கங்களானது பல்வேறு வகைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவைகள் அரசு, அரசு சாரா நிறுவனங்கள், வங்கி மற்றும் பிற நிறுவனங்களால் ஆரம்பிக்கப்படுவதும் மற்றும் தன்னிச்சையாக உருவாகுவதும் உண்டு. தன்னிச்சையாக ஆரம்பிக்கப்படும் சங்கங்கள் அனைத்தும், தேவையின் அடிப்படையிலும், சூழ்நிலையினால் உருவாவதும் ஆகும்.

பிற நிறுவனங்களால் உருவாக்கப்படும் சங்கங்களானது, அவ்வமைப்பு விலகி-விட்டால் சில சமயங்களில் செயலிழந்து விடுகின்றன. எனவேதான் பல்வேறு நிறுவனங்களானது சங்கங்கள் சிறப்புடன் செயல்பட பல்வேறு வகைகளில் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

## ஏன் சங்கங்களானது சிறப்புடன் செயல்பட வேண்டும்?

ஏரி நீர் பயன்படுத்துவோர் போனற சங்கங்கள் தன்னிச்சையாகத் தோன்றியவை அல்ல. அவை பிற நிறுவனங்களால் தோற்றுவிக்கப்பட்டவைகளாகும். பிற நிறுவனங்கள், ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களை ஆரம்பிக்கும் போது நிதியளிப்போரின் நோக்கங்களுக்கு ஏற்ப அல்லது அவர்களின் (நிதியளிப்போரின்) புதிய முயற்சிகளைப் பரிசோதனை செய்து பார்க்கும் விதத்தில் அமைக்கப்படும். அச்சமயத்தில் சங்கங்களின் தேவைகளும் நிதியளிப்போரின் நோக்கங்களும் ஓரிடத்தில் ஒன்றிணையும் வாய்ப்புகள் உள்ளது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சங்கங்கள், மேலும் முன்னேற முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏனென்றால், இத்தகைய நிதி நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட




காலங்களுக்கு மட்டும் நிதி வழங்கும் தன்மை கொண்டுள்ளன. அதாவது மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு மட்டுமே அவை நிதி உதவி செய்யக் கூடியனவாக உள்ளன. சில சமயங்களில் இவ்விதமான நிதி உதவி ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு மேலும் தொடர்ந்து வரும், ஆனால் கடைசி வரையிலும் தொடர்ந்து வருவதில்லை.

மேற்கூறிய கருத்துக்களை எடுத்துக் கொண்டு ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் சிறப்புடன் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில், நிதி நிறுவனங்கள் சென்றவுடன் இச்சங்கங்களும் மறைந்துவிடும் அபாயம் உள்ளது. சங்கங்களின் நீடித்த நிலைத்த தன்மை என்பது பிற நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சங்கங்களுக்கு முக்கிய அம்சமாகும்.

## நிலைத்த தன்மை என்றால் என்ன? சங்கங்களின் நிலைத்த தன்மைக்கு செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

நிலைத்தத் தன்மைக்கு ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் பார்வையிலிருந்து பொருள் என்னவென்றால்:

- பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கையில் எவ்வாறு இந்த சங்கங்கள் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன.
- சங்கங்களானது வெளிநிறுவனங்களைப்

(அரசு சாரா மற்றும் பிற நிறுவனங்கள்) பெரிய அளவில் சார்ந்து இல்லாமல், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கையில் முன்னேற்றமடைய உறுப்பினர்கள், தாங்களாகவே அதை நோக்கிச் செல்லும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

சுய மதிப்பீடானது மேலே குறிப்பிட்ட இரண்டு செயல்களை எவ்வாறு சங்கங்கள் செய்கின்றன என்று அறிய உதவும் கருவியாகும். ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் தன்னிச்சையாக தோன்றியவை அல்ல, அவைகள் வெளி நிறுவனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். எனவே, இச்சங்கங்கள் திட்டம் முடிவடையும் போது மறைந்து விடும் அபாயங்கள் உள்ளன. அந்த அபாயங்களைச் கலைத்து நீடித்த நிலைத்த தன்மையுடன் செயல்பட அனைத்து சங்கங்களும் சுய மதிப்பீடு செய்ய வேண்டும்.

**எவ்வாறான அளவு கோள்களை வைத்து சங்கங்கள் சுய மதிப்பீடு செய்ய வேண்டும்?**

ஒரு சங்கத்தினை மதிப்பீடு செய்யும் போது, மதிப்பீடு செய்வோரின் எண்ணங்களுக்கு ஏற்ப அளவுகோள்கள் மாறுபடும். .:பெரல் நிறுவனத்தின் அனுபவத்தில் 2003ம் ஆண்டு அறுபதிற்கும் மேற்பட்ட சங்கங்களை மதிப்பீடு செய்துள்ளோம். மதிப்பீடு செய்வதற்கு முன் சங்க உறுப்பினர்களின் பங்கேற்புடன் மதிப்பீடுகளின் அளவுகோள்கள் கண்டறியப்பட்டது. அவ்வாறாகக் கண்டறியப்பட்ட அளவுகோள்களின் தலைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- நிதி
- அமைப்பு
- பதிவேடுகள் பராமரித்தல்
- நீர் மேலாண்மை
- நிறுவனங்களுடன் தொடர்பு
- செயல்பாடுகள்

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் குணங்கள் வெவ்வேறாக இருந்தபோதிலும் மதிப்பீடு செய்யும் அளவுகோளானது பல ஒற்றுமையுடையைதாகும். நிதி, அமைப்பு, பதிவேடுகள் பராமரித்தல், செயல்பாடுகள், வெளிநிறுவனத் தொடர்புகள், போன்ற அளவுகோள்கள் இந்த இரு சமுதாய அமைப்புகளுக்கும் பொருந்தக்கூடியவையாகும். ஆனால் நீர் மேலாண்மையானது ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியதாகும்.

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களால் கண்டறியப்பட்ட அளவுகோளின் விளக்கம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**நிதி**

நிதியாதாரம் என்பது எல்லா சங்கங்களுக்கும் பொருந்தும் ஒன்றாகும். நிதி இல்லை என்றால் சங்கம் செயல்படுவதில் தொய்வு ஏற்படும். குறிப்பாக ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கமானது, பல்வேறான ஏரி தொடர்புடைய வேலைகளைச் செய்வதற்கான அடிப்படைத் தேவையாகும். இந்த நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும்? என்பதை அந்தந்த சங்கங்கள் கூடி முடிவெடுக்க வேண்டும்.

**தனி நபர் பங்குத் தொகை**

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்குத் தொகையினைச் செலுத்தி ஏரி புனரமைப்பு வேலைகளைச் செய்து வருகின்றன. சங்கங்கள் அளிக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்குத் தொகையானது கிராமப் பொதுப் பணத்தில் இருந்து அளிக்கப்படுகின்றது. ஆனாலும் ஒரு சிறிய தொகையினையாவது விவசாயிகள் தங்களின் சொந்த பணத்திலிருந்து அளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நாம், நம் பணத்தினைக் கொண்டு வேலை செய்துள்ளோம், மேலும்

செய்த வேலையினை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இல்லையென்றால் யாரோ செய்த வேலை நமக்கு என்ன என்று செல்லக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட வழி வகுத்து விடும். எனவே ஒவ்வொரு விவசாயியும் தங்களுக்கு என்ற நிர்ணயம் செய்து வைக்கப்பட்டுள்ள தனிநபர் பங்குத் தொகையினை சங்கத்திற்குச் செலுத்தி விவசாயிகள் தங்களின் உரிமையினை நிலை நாட்டிக் கொள்ள வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும்.

> ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்டத் தொகையினைத் தங்கள் சொந்தப் பணத்திலிலுந்து பங்குத் தொகயாகக் கொடுத்த பிறகு ஏரி நம்முடையது, கிராம மக்களாகிய நமக்கு ஏரி சொந்தமானது என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. ஒரு மாடு மேய்ந்தால் கூட ஏன் மேய்ந்தது? ஏன் மரம் வெட்டுகிறாய்? ஏன் வீணாக நீரைத் திறக்கின்றாய்? ஏன் ஏரியிலிருந்து மண் எடுக்கின்றாய்? கரையை ஏன் உடைக்கின்றாய்? என்ற கேள்வியைக் கேட்கின்றார்கள்.
>
> *கோவழி ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

## அமைப்பு

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கமானது ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பானது எவ்வாறாக செயல்படுகின்றது என்று மதிப்பீடு செய்வதற்கு சில அளவுகோள்கள் உள்ளன. அவற்றினை நாம் ஒவ்வொன்றாக இப்போது காண்போம்.


- வருகை புரிதல் மற்றும் பங்கேற்பு
- கூட்டத்தினை தவறாமல் நடத்துதல்
- பதிவேடுகள் பராமரித்தல்


## வருகை புரிதல் மற்றும் பங்கேற்பு

சங்கம் நடத்தும் அனைத்து கூட்டங்களிலிலும் பயனாளிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் சங்கத்தின் நிகழ்வுகள் அனைத்தையும் அறிந்துக் கொள்ள வாய்ப்புகள் கிடைக்கும். மைராடா போன்ற நிறுவனங்கள், குறைந்தது 80 சதவிகிதம் உறுப்பினர்களின் வருகையாவது ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்க வேண்டும் என்று தங்களின் ஆய்வுகளில் இருந்து எடுத்தக் கூறி உள்ளனர். நம்முடைய சங்கக் கூட்டங்களில் எத்தனை உறுப்பினர்கள் கலந்து கொள்ளுகின்றோம் என்று சற்றே சிந்தித்துப் பார்த்தால் மிகவும் நன்று. மேலும் கூட்டங்களில் கடமைக்கு என்று கலந்துக் கொள்ளாமல் உத்வேகத்துடன் பங்கேற்று பல அறிய ஆலோசனைகளைக் கூறி சங்கத்தின் வளர்ச்சிக்கு மென்மேலும் உதவி செய்ய வேண்டும்.

## கூட்டத்தினை தவறாமல் நடத்துதல்

சங்கப் பொறுப்பாளர்கள் சங்கக் கூட்டத்தினைக் குறிப்பிட்ட நேரத்தில் நடத்தி வர வேண்டும். கூட்டங்களைக் கூட்டுவது மட்டும் தனது வேலையாக இல்லாமல் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் மற்றம் தீர்மானங்களை செயல்படுத்தி காட்ட வேண்டும். அவ்வாறு தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றால் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் கூட்டாக ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும். சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏதேனும் இருக்கும்பட்சத்தில் அதனை சுமூகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். பொறுப்பாளர்களிடையேக் காணப்படும் கருத்து வேறுபாடுகள், பேசித் தெளிவுசெய்துக் கொள்ளா விட்டால் அவை சங்கத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகப் போய்விடும். ஆகவே கருத்து வேற்றுமைகளை ஆரம்ப






நிலையிலேயேக் களைந்து எறிவது மிகவும் முக்கியமானதாகும்.

**பதிவேடுகள் பராமரித்தல்**

சங்கங்கள் பதிவேடுகளைப் பராமரிப்பது என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும். பதிவேடுகளைப் பராமரிப்பதென்பது இரண்டு விதங்களில் நமக்கு உதவி-கரமாக இருக்கும்.

ஒன்று, சங்க உறுப்பினர்களிடையே ஒரு தெளிவினை உருவாக்கும். குறிப்பாக



தீர்மானம் மற்றும் கணக்குப் பதிவேடுகள் உறுப்பினர்களிடையே சங்கக் கூட்டத்தில் என்னென்ன கருத்துக்கள் பேசப்பட்டன? எந்தெந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன? எவ்வளவு பணம் மீதம் உள்ளது? போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கும் கண்ணாடியாக பதிவேடுகள் காணப்படுகின்றன. இதனால் உறுப்பினர்களிடையே அச்சம், குழப்பம் இவைகள் எதுவும் அண்டாமல் அனைவரும் தெளிவடைவதுடன் திருப்தியும் அடைவர். பெரும்பாலான சங்கங்களில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால் கணக்குகளில் ஏற்படும் குழப்பமே. இந்த குழப்பங்கள் சில சமயங்களில் முற்றிப்போய் சங்கங்களைச் செயல்படா தன்மைக்குக் கொண்டு செல்லக் கூடிய வாய்ப்புகளும் அதிகம் உள்ளன, என்பதை சங்க உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். எனவே, சங்கத்திற்கென்று கொடுக்கப்பட்டுள்ள கணக்குப் பதிவேடுகளை ஒழுங்காகப்

பராமரிக்கப்பட வேண்டியது நம் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் கடமையாகும். இந்த குழப்பங்களைத் தீர்ப்பதற்கென்று சில கிராமங்களில் உள்ள தகவல் பலகையில் சங்கத்தில் ஆகும் வரவு செலவுகளை அவ்வப்பொழுது எழுதி வைக்கின்றனர். இது அனைவராலும் பாராட்டக்கூடிய செயலாகும்.

இரண்டு, வெளியில் இருந்து வரும் அதிகாரிகள் அல்லது வெளிச்சுற்று அனுபவத்திற்காக வரும் விவசாயிகள் அனைவரும் சங்கத்தின் முந்தைய நடவடிக்கைகளை பதிவேடுகள் மூலமே பெரும்பான்மையானவற்றை அறிவர். எவ்வளவுதான் ஒரு சங்கம் சிறப்பாக செயல்பட்டாலும் அவை பதிவேடுகளில் பிரதிபலிக்கவில்லை என்றால் வெளியில் இருந்து வரும் நபர்கள் எதிர்மறையான முடிவிற்கு தான் வருவார்கள். எனவே பதிவேடுகள் பராமரிப்பது என்பது உறுப்பினர்கள் மற்றும் வெளியாட்களுக்கும் சங்க செயல்பாட்டினைப் பற்றி ஒரு நல்ல கண்ணோட்டத்தை வழங்கும் என்பதில் எந்த ஒரு ஐயப்பாடும் இல்லை.

செயற்குழு திட்டமிட்டபடி, சங்கம் ஒன்றுகூடி திட்டத்தை செயல்படுத்த துவங்கியது. சங்கத்தின் சார்பாக வேலை நடைபெறும்போது சங்கப் பொறுப்பாளர் ஒருவரும், அரசு சாரா நிறுவனத்தின் பொறுப்பாளர் ஒருவரும் சேர்ந்து வேலையை பொறுப்பேற்று திட்டம் செயல்படுத்தப்படடது. இந்த காலக் கட்டத்தில் வாஞ்சியை ஆழப்படுத்துதல், கரைகள் பலப்படுத்துதல், கரைகளைப் பாதுகாக்க மரக்கன்றுகள் நடுதல், பாசன வாய்க்கால் சீரமைத்தல், போன்ற வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கான கணக்குகளை அவ்வப்போது கூட்டம் போட்டு வெளிப்படையாக உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, உறுப்பினர்களால் பார்வையிடப்பட்டது. மேலும் மாதந்தோறும் தவறாமல் கூட்டம் கூடி பேசி வருகின்றோம்.

*வடஅகரம் வாஞ்சி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

## நீர் மேலாண்மை

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம், ஏரியில் புனரமைப்பு வேலையினை மட்டும் செய்தால் போதாது. நீர் மேலாண்மையினையும் சங்கம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீர் மனித வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகும். அப்படிப்பட்ட நீரினையே விவசாயிகளாகிய நாம் பல சமயங்களில் வீணடித்துக் கொண்டுள்ளோம் என்பதனைச் சற்றே நினைவு கூர்ந்து, வருத்தப்பட்டே ஆக வேண்டும். ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் நோக்கங்கள் என்ன?

- ஏரி நீரைச் சிக்கனமாகச் செலவிட வேண்டும்.
- கடைமடைக்கும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
- உற்பத்தியினைப் பெருக்க வேண்டும்.

போன்ற உயரிய நோக்கங்களைக் கொண்டுள்ளது என்பதனை நாம் நன்கு அறிவோம். ஆனால் மேற்கூறிய நோக்கங்களை அடைய நாம் எவ்வளவு முயற்சி செய்துள்ளோம் என்று நாமே நம்மை ஒரு சுய மதிப்பீடு செய்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏனென்றால், பல நேரங்களில் நீரின் மதிப்பினை உணராமல் அதனை வீணாக்கிக் கொண்டுள்ளோம். இதற்கு நம்மால் பல உதாரணங்களைக் கூற முடியும். பாசன வாய்க்காலினை சீர் செய்யாமல் நீரினை வீணடித்தல், வாய்மேல் வாய் பாசனம் போன்றவை சிறந்த உதாரணங்கள் ஆகும். எனவே தவறான முறையில் பாசனம் செய்யும் விவசாயிகள் அந்த

முறையினை மாற்றி சரியான முறையில் பாசனம் செய்ய வெண்டும். அவ்வாறு சரியான முறையில் பாசனம் செய்ய முற்படும் போது விவசாயிகள் சில சிரமங்களைச் சந்திக்க வேண்டி இருக்கும். ஆனால் நாளடைவில், காலம் செல்லச் செல்ல சிரமமானது மாறிவிடும். மேலும் நீண்டதோர் பலனையும் நாம் அடையலாம் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. எனவே நம்மிடம் மாற வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். பிறகு மாற்றங்கள் தன்னால் நடக்கும்.

**கடைமடைக்கும் நீர் கிடைக்க வேண்டும்**

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் முக்கிய நோக்கமே அனைத்து விவசாயிகளும் கிடைக்கும் நீரை சிக்கனமாகச் செலவு செய்து அனைவருக்கும் பயன்படக்கூடிய வகையில் நீரினைப் பயன்படுத்தி பயனடைய வேண்டும். அதன் முதல் படியாக கடைமடை விவசாயிகளுக்கு நீரினை சம அளவில் பகிர்ந்து அளிக்க வேண்டும். அப்போதுதான் நமது சங்கம் கடைமடை விவசாயிகளின் நம்பிக்கையினை பெறும். இந்த நம்பிக்கையானது சங்கத்தின் நீடித்த நிலைத்த தன்மைக்கு வழி வகை செய்யும்.


**பாசன வாய்க்காலை சீர் செய்தல்**


பெரும்பான்மையான கிராமங்களில் விவசாயிகள் பாசனவாய்க்காலை சீர் செய்யாமல், நீரை வீணடித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த முறையினை மாற்றிப் பாசன வாய்க்காலைச் சீர் செய்து ஒவ்வொரு போகத்திற்கும் உயர் விளைச்சலைப் பெறும் வகையில் நாம் விவசாயம் செய்ய வேண்டும் என்ற உறுதி மொழியினை விவசாயிகள் அனைவரும் எடுக்க வேண்டும்.

எங்கள் பாசன சங்கத்தின் மூலம் இரண்டு நீர்க்கட்டிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களே பாசனத்திற்குத் தண்ணீர் திறப்பது, மூடுவது போன்ற கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளது.

- நீர்க்கட்டிகளைத் தவிர வேறுநபர் மதகு திறந்தால் ரூபாய் 100 அபராதம் விதிக்கப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- மேலும் கண்டபடி மதகுகளைத் திறந்து தண்ணீரை வீணாக்காமல் தேவைப்படும் நிலத்திற்கு மட்டும் தேவையான நீர் அளவாகப் பாய்ச்ச வேண்டும்.
- தனி நபர் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் அவர் நிலத்திற்கு மட்டும் தண்ணீர் திறந்து விடக்கூடாது.
- சங்கப் பொறுப்பாளர்கள் ஆயக்கட்டு நிலங்களைப் பார்வையிடுதல் வேண்டும். தண்ணீர் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கின்றதா? என்பதனைப் பார்த்துத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.
- பகல் நேரங்களில் மட்டும் மதகு திறந்து பாசனம் செய்ய வேண்டும். மேலும் மதகு திறப்பது, மூடுவது , பராமரிப்பது போன்றவை நீர்க்கட்டியின் பணிகள்.
- மேலும் இவர்களுக்கு ஊதியமாக வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு 4 மரக்கால் நெல் கொடுக்க வேண்டும், என எங்கள் சங்கம் முறைப்படுத்தியுள்ளது.

*காயல்மேடு ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*






எங்கள் ஆயக்கட்டில் உள்ள பாசன வாய்க்கால்கள் மண் கால்வாய்களாக இருப்பதால் நண்டுவலை மற்றும் மண் அறிப்பு போன்ற பல வழிகளில் நீர் சேதம் அடைகிறது. அதனால் சங்கப் பொறுப்பாளர்கள் சென்று நீர் கட்டியை அழைத்து மோழை மெரிப்பது, நீர் கசிவைத் தடுப்பது போன்ற வேலைகளைச் செய்து வருகின்றோம்.

*ஆடவல்லிக் கூத்தான் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

**நிறுவனங்களுடன் தொடர்பு**

ஏரி நீர் பயன்படுத்தவோர் சங்கங்கள் வெளிநிறுவனங்களின் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். வெளிநிறுவனங்களின் தொடர்புகள் என்பது அரசு நிறுவனங்கள், வங்கிகள், கிராமப் பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகும். சங்கங்கள் பஞ்சாயத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டு கிராமங்களில் இருக்கும் இயற்கை வளத்தினை பகிர்ந்துக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும். அரசு துறையுடன் தொடர்பு வைத்துக்கொண்டு அரசு மூலம் செயல்படுத்தப்படும் வேலைகளைத் துரிதமாக நடைபெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். மேலும் அரசு மூலம் கிடைக்கும் திட்டங்களையும் பெற்று பயனடைய ஏதுவாக இருக்கும். அரசு சாரா நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலம் பல நல்ல திட்டங்களையும், வெளி நிறுவனங்களின் தொடர்புகளையும், வேலைகளையும் நம்மால் அறிந்துக் கொள்ள முடியும்.



சங்கம் ஆரம்பித்து முதன் முதலில் சங்கத்தின் சார்பாக திண்டிவனம் பொதுப் பணித்துறை (PWD) அலுவலகத்துக்குச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் சென்று ஏரி வேலை செய்வதற்கு உண்டான ஒப்புதல் பெறச் சென்றோம். அப்போது SDO அவர்கள் எங்களை அழைத்து உட்கார வைத்தார். மேலும் என்னென்ன ஏரி வேலை செய்யப் போகிறீர்கள் மற்றும் எப்படி செய்யப் போகிறீர்கள் என்று விசாரித்தார். அனைவரையும் டீ சாப்பிடுங்கள் என்று கூறி டீ வாங்கி வரச் சொல்லி எங்களுக்கு டீ கொடுத்து உபசரித்தார். மேலும், அவர் எங்களைப் பொதுப் பணித்துறையுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பொதுப் பணித்துறை, சங்கம் கூப்பிடும் போது வந்து உதவி செய்ய தயாராக உள்ளது என்றும், ஏன் சங்கம் பொதுப் பணித்துறையினரை வேலை செய்யும் சமயம் அழைப்பதில்லை என்றும் கேட்டார். அதற்கு ஏரி நீர் பாசன சங்கத்தின் உறுப்பினர்களாகிய நாங்கள், SDO அவர்களிடம் ஐயா நாங்கள் ஒன்று கூறினால் நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது, நாங்கள் வெளிப்படையாகச் சொல்ல ஆசைப்படுகின்றேன் என்று கூறினேன். அதற்கு அவர் பரவாயில்லை சொல்லுங்கள் நாங்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டோம் என்று கூறினார். அதன் பிறகு நாங்கள் கீழ்க்கண்டவாறு கூறினோம்: அதாவது உங்கள் அலுவலகத்தில் உள்ள பொறியாளர்களை எங்கள் ஊரில் நடைபெறும் வேலையினை மேற்பார்வையிட அழைத்தால், அன்று அவர்களுக்குச் சில எதிர்பாராத செலவுகள் செய்ய வேண்டி உள்ளது. இவற்றிற்கு ஆகும் செலவுகளை எங்களுக்கு யார் கொடுப்பது? எந்த கணக்கில் எழுதுவது என்று கேட்டோம். ஆனால் அதே பல்மைரா ICEF திட்டத்தின் மூலம் செயலாற்றும் பொறியாளர்களுக்கு தபால் அல்லது வாய்வழி சொல்லி அனுப்பினாலே போதும், ஒரு டீக்குக் கூட செலவில்லாமல் அவர்களே வந்து வேலையினை முடித்துக் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்று கூறினோம். அதற்கு SDO அவர்கள் இனிமேல் இது போன்ற தவறுகள் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்கிறேன், நீங்கள் எங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போதுதான் தனி நபராக செயல்படுவதை விட சங்கமாகச் செயல்படுவதன் நோக்கத்தினை அறிந்து வியப்படைந்தோம். தனி நபராகச் சென்றிருந்தால் அவ்வளவு தைரியமாக SDO அவர்களிடம் பேசி இருக்க முடியாது மேலும் இவ்வளவு மரியாதையும் உபசரிப்பும் கூட கிடைக்க வாய்ப்பு இல்லை என்ற உண்மையினயும் புரிந்துக் கொண்டோம்.

தனி ஒருவனாகச் சென்றால் நாம் அவர்களுக்கு டீ வாங்கிக் கொடுக்க வேண்டும். அதுவே சங்கமாகச் சென்றால் அவர்கள் நமக்கு டீ வாங்கிக் கொடுப்பார்கள் என்று ஈரோடு மாவட்டத்தில் இயங்கி வரும் கீழ் பவானி பாசனக் கூட்டமைப்பினை, வெளிச்சுற்றின் மூலம் பார்வையிடச் சென்ற போது அந்த கூட்டமைப்பில் உள்ளவர்கள் கூறியதை, இன்று திண்டிவனம் பொதுப் பணித் துறை அலுவலகம் உண்மையாக்கி நிரூபித்தும் உள்ளது, என்று நாங்கள் அனைவரும் பேசிக் கொண்டோம்.

*கோவடி ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

## செயல்பாடுகள்

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்களின் செயல்பாடுகள் பல வகைகளில் இருக்கும். அவை பின்வருமாறு:

- வேலையினை மேற்பார்வையிடுதல்
- ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்
- பயற்சிகளை பயன்படுத்திக் கொள்ளுதல்
- புனரமைப்புக்குப் பின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு
- பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்
- பெண்களின் பங்கேற்பு

## வேலையினை மேற்பார்வையிடுதல்

ஏரி சங்க உறுப்பினர்கள் ஏரியினைத் தூர் எடுக்கும் போது அதனை மேற்பார்வையிட வேண்டும். இவ்வாறு செய்வது சங்கத்தின் மீது உறுப்பினர்களுக்கு இருக்கும் அக்கறையினை எடுத்துக்காட்டும். மேலும், சங்கமானது புனரமைப்பிற்குப் பின்பும் செயல்பாடுகள் மற்றும் செய்த வேலைகளை பராமரிப்பு செய்ய வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். ஏரியை தூர் எடுக்கும் சமயம் அனைத்து உறுப்பினர்களும் அதில் அக்கறை, ஆர்வம் காட்டுவது என்பது இயல்பு. ஆனால் அந்த ஆர்வத்தை சங்கங்கள் ஏரி புனரமைப்பிற்குப் பின்பும் காட்ட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

ஏரியில் ஒரு சிலர் தங்களின் சுய நலத்திற்காக பொதுச் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்கின்றனர். அவ்வாறு ஒரு சிலர் ஆக்கிரமிப்பு செய்வதால் பல இடர்பாடுகளைப் பாசனத்தில் ஈடுபடுபவர்கள் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக சிலர் வரத்து வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதால், மழை நீர் ஏரியின் உள்ளே வராதவண்ணம் தடை-செய்து வைத்தள்ளனர். மேலும் சிலர் ஏரியின் உள்ளேயும் ஆக்கிரமிப்பினைச் செய்வதால் ஏரியின் நீர் கொள்ளளவு

> சங்கம் ஆரம்பிப்பதற்கு முன் எங்கள் கிராமத்தில உள்ள ஏரியில் ஆக்கிரமிப்பைப் பற்றி நாங்கள் கண்டு கொள்வதில்லை. ஏனென்றால் தனியா-கச் சென்று கேட்பதற்கு தயங்குவார்கள், மேலும் எதற்கு நமக்கு இந்தப் பிரச்சினை என்று அவரவர் தட்டிக் கழித்து விடுவார்கள்.
>
> எங்கள் கிராமத்தில் ஏரி நீர் பாசனம் பயன்படுத்துவோர் சங்கம் பல்மைரா ICEF உதவியுடன் ஆரம்பித்த பின்னர், முதன் முதலில் ஏரியினை சர்வே செய்யப்பட்டது. பிறகு ஏரி புனரமைப்புப் பணி செய்யும் போது மண்ணை எடுத்து அந்த ஆக்கிரமிப்புப் பகுதியில் கொட்டப்பட்டது. இதில் ஒரு சிலர் வந்து மண் கொட்டக் கூடாது என்று கூறி வந்தனர். ஆனால் சங்கத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள் அவர்களிடம் சென்று நாங்கள் எல்லா இடத்திலும் மண்ணைக் கொட்டுகின்றோம், அதனால் உங்களுக்கு மட்டும் விதி விலக்குக் கொடுக்க முடியாது என்று பேசி அங்கு இருந்த ஆக்கிரமிப்பினை மேற்கொண்டு எவ்விதமான பிரச்சினையும் இல்லாமல் முழுமையாக அகற்றினர்.
>
> *கரசானூர் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

குறைய காரணமாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட செயல்களை ஒருவர் கூட எள்முனை அளவும் செய்யக் கூடாது. ஆக்கிரமிப்பு செய்பவர்களை சமூக விரோதிகள் என்று கூறினால் அது மிகையாகாது. இந்தப் பிரச்சினைகளை தனிநபராக நின்று கேள்வி கேட்பதை விட ஒரு சங்கமாக இருந்து கேள்வி கேட்பது சிறந்தது. ஆக்கிரமிப்பால் பாதிப்பு அடைந்துள்ள சங்கங்கள், தனக்கு மேலே செயல்பட்டு வரும் கூட்டமைப்பில் தகவல்

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு சிலர் ஏரியின் ஒரு பகுதியை விவசாய நிலங்களாகப் பயன்டுத்தி, தங்களின் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டு வந்திருந்தனர். அவரவர் ஒவ்வொரு பிரிவாக செயல்பட்டதால் ஆக்கிரமிப்பை அகற்ற முடியவில்லை.

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் ஆரம்பித்த பிறகு அனைத்து ஆயக்கட்டுதாரர்களுக்கும், ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களைத் தட்டிக் கேட்கும் உரிமை கிடைத்தது. அதன் பிறகு அனைத்து ஆக்கிரமிப்புக்காரர்களும் இது பற்றி யோசிக்க வேண்டிய நிலை உண்டானது.

*எண்டியூர் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*


விவசாயிகளின் முன்னேற்றத்தில் ஒரு தடைக்கல்லாக இருப்பது இந்த ஆக்கிரமிப்பும் ஒன்று. ஒற்றுமையுடன் விவசாயிகள் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டால் தடைக்கல்லை வெற்றிப்படிக் கல்லாக மாற்றலாம் என்பது நிச்சயம்.

*கூனிமேடு ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

கொடுத்து, அதன்மூலம் கூட்டமைப்பானது அரசு அதிகாரிகளைச் சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்க வழிவகை செய்ய வேண்டும். இதன் மூலம் தனிப்பட்ட விரோதத் தன்மை வளர்வதற்கு உண்டான வாய்ப்பை முற்றிலும் தவிர்க்கலாம்.

**பயிற்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல்**

ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் அரசு சாரா மற்றும் பிற நிறுவனங்களின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இச்சங்கங்களுக்கு முறையான பயிற்சி என்பது மிகவும் முக்கிய ஒன்றாகும். இப்பயிற்சியானது பல வகைப்படும். தலைமைத்துவப் பண்புகள், கணக்கு, நீர் மேலாண்மை,தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் வெளிச்சுற்று செல்லுதல் ஆகும். மேற்கூறிய பயிற்சிகளானது அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்க இயலாத ஒன்றாகும். எனவே குறிப்பிட்ட சிலரை மட்டுமே பயிற்சிக்கு அழைத்துச் செல்ல முடியும். அப்படி பயிற்சியில் பங்கேற்ற உறுப்பினர்கள் தாங்கள் பயிற்சியில் தெரிந்துக் கொண்டவற்றை மற்ற உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூற வெண்டும். பயிற்சிகளுக்குச் சென்று வந்தவர்களிடம் விளக்கம் பெற்ற மற்ற உறுப்பினர்களும், பயிற்சிக்குச் சென்றுவந்த உறுப்பினர்களும் தாம் அறிந்துக் கொண்டவற்றிற்கு ஏற்றவாறு நடந்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பயிற்சியின் முழுமையான நோக்கத்தை அடைய முடியும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.



அரசுசாரா அமைப்பான பல்மைரா ஐ.சி.எ.:.ப். நிறுவனத்தின் ஊழியர்கள் எங்கள் கிராமத்திற்கு அடிக்கடி வந்து கூட்டம் போட்டு நல்ல கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஆதலால் எங்களை நாங்களே நிர்வகிக்கும்படியும், கணக்குகளுக்குப் பயிற்சி கொடுத்தும், பேச்சுத் திறமையினை வளர்த்துக் கொள்ளவும் உதவியுள்ளனர். இதனால் எங்கள் சங்கத்தையும் ஏரியையும் நாங்களே நிர்வகிக்கப் பயிற்சி பெற்றுள்ளோம்.

*கரசானூர் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

பயிற்சி மற்றும் வெளிச்சுற்று அனுபவத்தின் மூலம் உயிர் உரம், மாற்றுப் பயிர் திட்டம், நீர் மேலாண்மை, சங்கம் ஒற்றுமையாக எப்படி செயல்பட வேண்டும் போன்றவற்றைத் தெரிந்து கொண்டுள்ளோம்.

*தேற்குணம் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம்*

**புனரமைப்பிற்குப் பின் செயல்ாடு மற்றும் பராமரிப்பு:**

பெரும்பாலான சங்கங்கள் ஏரி புனரமைப்பிற்குப் பின் மிக குறைந்த அளவிலான அக்கறையினையே காட்டுகின்றனர். இது முற்றிலும் சங்க வளர்ச்சிக்கு உகந்ததல்ல. சங்கமானது ஏரி புனரமைப்பிற்குப் பின்பும் அதன் செயல்பாடுகளில் அக்கறை செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதற்காக ஏரி புனரமைப்பு வேலைக்குப் பின்பும் சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடி செய்த வேலைகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும்? என்ற

ஏரி புனரமைப்பிற்குப் பின் சங்கத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுடன் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் இணைந்து மரக்கன்றுகள் நடவு செய்தோம். தண்ணீர் பற்றாக்குறையினைப் போக்க ஏரியின் உட்பகுதியில் இரண்டு ஆயில் இஞ்சின் போர்கள் போட்டு பயனடைந்து வருகின்றோம். மேலும் மழை பொழிந்து அணையின் ஓரம் சரிந்து உள்ள இடங்களை சங்க ஆயக்கட்டுதாரர்கள் அனைவரும் சென்று கரையை ஏரியின் உள்ளிருந்து மண் எடுத்து ஆட்கள் மூலம் சரி செய்துள்ளோம். மேலும் அணை-யினைக் கண்ட இடங்களில் உடைத்து வண்டி ஓட்டாமல் தனியாக இறங்கி, ஏற பாதை அமைத்து அந்த பாதையில் மட்டும் வண்டி போகவும் ஏற்பாடுகள் செய்துள்ளோம். மேலும் சங்கத்தின் வருமானத்திற்காக மீன் வளர்ப்பும் செய்துள்ளோம்.

*காயல்மேடு ஏரிநீர் பயன்படுத்துவோர் சங்கம்*

புனரமைப்பிற்குப்பின் ஏரியை பராமரிப்பது மிகவும் முக்கியமான பணியாகும். சங்கத்திற்குப் பராம-ரிப்பிற்கு என்று விவசாயிகளிடம் தொடர்ந்து சந்தா வசூல் செய்தும் பல்மைரா மற்றும் அரசின் மூலம் நிதி உதவி பெற்றும் ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம் பராமரிப்பு பணிகளைத் தொடர வேண்டும் என்பதே சங்கத்தின் திடமான நம்பிக்கை.

*ஆலங்குப்பம் ஏரி நீர் யன்படுத்துவோர் சங்கம்*

செயல்திட்டத்தினை வகுக்க வேண்டும். பல இலட்சங்கள் செலவு செய்த பின்பு அவற்றை கவனிப்பின்றி விட்டு விட்டால், நாம் செய்து முடித்த வேலைக்குப் பயன் இல்லாமல் போய்விடும். எனவே பராமா-ிப்பு மற்றும் செயல்பாடு என்பது சங்கங்களின் நிலைத்த தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும்.

**பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்**

சங்கங்களில் உள்ள உறுப்பினர்களிடையே ஒரு சில பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படுவதென்பது இயல்பான ஒன்றே. ஆனால் அப்பிரச்சினைகளை உடனடியாக சம்மந்தப்பட்ட நபர்களிடம் கலந்துப் பேசி சுமூகமான தீர்வு காண வேண்டும். சங்க உறுப்பினர்கள் பிரச்சினைகளை அப்படியே விட்டுவிட்டால் அதுவே சில சமயங்களில் சங்கம் கலைந்து போவதற்கான வாய்ப்பாக அமைந்துவிடும். ஏனவே, அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சினைகளை அலட்சியம் செய்யாமல், சம்மந்தப்பட்ட இரு தரப்பினரையும், அழைத்து தீர விசாரித்த பின்னரே ஒரு முடிவிற்கு வர வேண்டும். இரண்டு தரப்பினரையும் விசாரிக்காமல் ஒரு சாராரை மட்டும் விசாரித்து எடுக்கும் முடிவுகள் பெரும்பாலான நேரங்களில் தவறான முடிவாகவே அமைந்துவிடும். எனவே, சங்கத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் இரு தரப்பினரையும் தீர விசாரித்தே முடிவு எடுப்பது சிறந்தது. அவ்வாறாக எடுக்கப்படும் முடிவிற்கு உறுப்பினர்கள் கட்டுப்பட வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது மிகவும் கவனமாகக் கையாள வேண்டிய விஷயமாகும், எனவே இதனைச் சற்று சாதாரணமான விஷயமாக எடுத்துக் கொண்டால் சில நேரங்களில் வேறொரு பிரச்சினைக்குக் கொண்டுச் சென்று அபாயத்தில் விட்டுவிடும்.

**பெண்களின் பங்கேற்பு**

ஏரி நீர் பயன்படுத்துவோர் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பெண்களும் சேர்ந்து செயல்பட வேண்டும். நம் சமுதாயமானது ஆண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயமாகும். இப்படிப்பட்ட சமுதாயத்தில் பெண்களுக்கு, உரிய அங்கீகாரம் வழங்கப்படுவது மிகவும் குறைவே. பெண்கள் விவசாயத்தில் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டு வந்தாலும், அவர்களுக்கு சங்கங்களில் உரிய மரியாதை மற்றும் முக்கியத்துவம் வழங்க தயக்கம் உள்ளது. இந்த அணுகுமுறையை மாற்ற வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். எனவே ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தில் பெண்களுக்கும் உரிய இடம் கொடுத்து, அதன் மூலம் அவர்களும் சங்கத்தில் பங்கேற்கும் போது பெண்களும் தங்களின் கருத்து மற்றும் எண்ணத்தினை வெளிப்படுத்தக் கூடிய ஓர் அறிய வாய்ப்பினைப் பெறுகின்றனர். சங்கத்தில் பெண்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களும், எண்ணங்களும் சங்க வளர்ச்சிக்குப் பயன்படுமேயன்றி, எவ்விதமான தீங்கினையும் சங்கத்திற்கு ஏற்படுத்தாது. மேலும் பெண்கள் சில குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய வல்லவர்களாவார்கள்.

குறிப்பாக ஏரிக்கரையில் மரங்கள் வளர்த்தல் மற்றும் ஏரியில் மீன் வளர்த்தல் போன்ற வேலைகளில் அவர்களை ஈடுபடச் செய்யும் பொழுது பெண்களுக்கென்று ஒரு சிறிய வருமானத்தினைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஒரு குடும்பத்தில் இருக்கும் ஆண் அல்லது பெண் இருவரில் யாருக்கு வருமானம் கிடைத்தாலும் அது ஒட்டு மொத்த கிராமத்தினையே முன்னேற்றப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு குடும்பமும் முன்னேற்றமடைந்தால் ஒரு கிராமம்

முன்னேற்றமடையும், ஒவ்வொரு கிராமமும் முன்னேற்றமடைந்தால் ஒட்டுமொத்த சமுதாயமே முன்னேற்றமடையும் என்பதையாரும் மறுப்பு கூற முடியாது. எனவே, குடும்பம், கிராமம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்கு என்பது இன்றியமையாத ஒன்றாகும். அதற்காக பெண்களை முடிந்தவரை எவ்வாறு அனைத்து வேலைகளிலும் ஈடுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு ஈடுபடுத்தி அவர்களையும் பங்கேற்கச் செய்வது என்பது மிகவும் முக்கிய தேவையாகும்.

# முடிவுரை

இதுவரை நாம் படித்து அறிந்துக் கொண்ட விஷயங்கள் யாவை? சங்கம் நிலைத்து நிற்க செய்ய வேண்டியவை யாவை? என்ற கேள்வி எழுந்த போது சங்கங்களைச் சுய மதிப்பீடு செய்ய வேண்டும், சுய மதிப்பீடு செய்ய வேண்டுமெனில் எந்த எந்த அளவு கோள்களை வைத்து சுய மதிப்பீடு செய்ய வேண்டும் என்று தெளிவாகப் பார்த்தோம். இத்தகைய சுய மதிப்பீடுகள் ஒரு முறை மட்டும் செய்துவிட்டு அப்படியே விட்டுவிடக் கூடாது, வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறையாவது சுய மதிப்பீட்டினைச் செய்ய வேண்டும் என்று உறுப்பினர்களாகிய நீங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மதிப்பீடு செய்தலின் முக்கிய நோக்கமே சங்கங்கள் எந்தெந்த அளவுகோள்களில் சிறப்பாக செயல்படுகின்றன மற்றும் எந்தெந்த அளவுகோள்களில் பின்தங்கி செயல்படுகின்றன என்பதனை அறிய உதவும் கருவியாகும். மேலும் நம் சங்கமானது எங்கே செல்கின்றது? நல்ல முன்னேற்றத்தினை எவ்வாறு கொண்டு வருவது? போன்றவற்றில் முழுக் கவனத்தைச் செலுத்த உதவும். சுய மதிப்பீடானது நமது சங்கங்கள் ஒரு நல்ல சங்கமாக உருவாவதற்கு உதவி செய்வது மட்டுமின்றி உறுப்பினர்களின் திறனையும் அதிகரிக்கின்றது. இதனால் உறுப்பினர்கள் தங்கள் சங்கச் செயல்பாடுகளில் சிறப்புடன் பங்கேற்கவும் உதவுகின்றது. சுய மதிப்பீடுகளின் முழுப் பலனும் எப்போது கிடைக்கும் என்றால், அதன் மூலம் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் நாம் எந்த விதமான வேலைகளைச் செய்கின்றோம் என்பதைப் பொறுத்தே அமையும். மீண்டும் ஒரு முறை உறுப்பினர்களாகிய உங்களின் பங்கேற்புடன் அளவு கோள்கள் கண்டறியப்பட வேண்டும், ஏனென்றால் தற்சமயம் கண்டறியப்பட்டுள்ள அளவு கோள்களில் ஒருசில அல்லது முற்றிலுமோ மாறக்கூடும், அல்லது அளவு கோள்கள் முற்றிலும் மாறாமல் இருக்கும். மதிப்பீட்டிற்கான அளவு கோள்களை நாளைய சூழ்நிலைக்கேற்ப கண்டறிந்து வைத்துக் கொள்வது என்பது மிகவும் முக்கியம். மேலும் மதிப்பீடு செய்யும் குழுவானது பாரபட்சமின்றி சங்கங்களுக்கு மதிப்பெண்கள் வழங்க வேண்டும். குறிப்பாக தங்களுடைய சங்கங்கள்தான் என்று அதிக மதிப்பெண்கள் வழங்குவது கூடாது. சிறப்பாகச் செயல்படுகின்ற அம்சங்களில் மேலும் சிறப்பாகச் செயல்படவும், பின்தங்கி இருக்கும் அம்சங்களில் போதிய கவனத்தைச் செலுத்தவும் மதிப்பீடு செய்தல் உதவியாக இருக்கும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.

| அளவுகோள் | ஆதாரங்கள் |
|---|---|
| | |
| நிதி | |
| நிதி ஆதாரம் திரட்டுதல் | இரசீதுப் புத்தகம், பொதுப் பேரேடு, தீர்மானப் புத்தகம், கணக்குப் பேரேடு |
| தனிநபர் பங்குத் தொகை | இரசீதுப் புத்தகம், பொதுப் பேரேடு, தீர்மானப் புத்தகம், கணக்குப் பேரேடு |
| சந்தாத் தொகை | இரசீதுப் புத்தகம், பொதுப் பேரேடு, தீர்மானப் புத்தகம், கணக்குப் பேரேடு |
| | |
| அமைப்பு | |
| வருகை தருதல் | வருகைப்பதிவேடு புத்தகத்தைப் பார்வையிடல் |
| கூட்டத்தில் பங்கேற்பு | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| கூட்டத்தினை தவறாமல் நடத்துதல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| தீர்மானங்கள் செயல்படுத்துதல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| கூட்டாகச் செயல்படுதல் | கலந்துரையாடல் |
| விவாதப் பொருள் கொண்டுவருதல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| | |
| புத்தகங்கள் பராமரித்தல் | |
| கணக்குப் பேரேடு | கணக்குப் பதிவேடுகள் மற்றம் இரசீதுப் புத்தகம் பார்வையிடல் |
| தீர்மான புத்தகம் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| வருகைப்பதிவேடு | வருகைப்பதிவேடு புத்தகத்தைப் பார்வையிடல் |
| தணிக்கை செய்தல் | தணிக்கை செய்த ஆதாரத்தைப் பார்வையிடல் |
| | |
| நீர் மேலாண்மை | |
| நீர்க்கட்டி நியமித்தல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல் |
| கடைமடைக்கும் நீர் கிடைக்கச் செய்தல் | கலந்துரையாடல் மற்றும் நடந்துச் சென்று பார்வையிடல் |
| பாசனவாய்க்காலை சீர் செய்தல் | தீர்மானப் புத்தகம் மற்றும் செய்து முடிக்கப்பட்ட வேலையினைப் பார்வையிடல் |
| | |
| நிறுவனங்களுடன் தொடர்பு | |
| அரசு நிறுவனங்களுடன் தொடர்பு | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல் |
| பஞ்சாயத்துடன் தொடர்பு | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல் |
| மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல் |
| | |
| செயல்பாடுகள் | |
| வேலையினை மேற்பார்வையிடுதல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல் |
| ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல் |
| பயிற்சிகளை பயன்படுத்திக் கொள்ளுதல் | கலந்துரையாடல் |
| புனரமைப்பிற்குப் பின் செயல்பாடு மற்றும் | தீர்மான புத்தகத்தை பார்வையிடல், கலந்துரையாடல், நடந்துச் சென்று பார்வையிடல் |
| பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் | கலந்துரையாடல், தீர்மானப் புத்தகத்தைப் பார்வையிடல் |
| பெண்கள் பங்கேற்பிற்கு வாய்ப்பளித்தல் | கலந்துரையாடல், தீர்மானப் புத்தகத்தைப் பார்வையிடல் |
| | |

| | மதிப்பெண்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## இணைப்பு

**பங்கேற்பு முறையில் மதிப்பீடு செய்தல்**

சமுதாயத்தைச் சார்ந்த அமைப்பின் உறுப்பினர்கள் தங்களின் செயல்பாடுகளைத் தாங்களாகவே தங்களை முழு ஈடுபாட்டுடன் ஆண்டிற்கு ஒரு முறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்து கொள்வதே சுயமதிப்பீடு.

சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், குறைகளைக் களையவும், புதிய செயல் திட்டங்களில் ஈடுபடவும், சங்கங்கள் தங்களைத் தாங்களே முழு பங்கேற்போடு மதிப்பீடு செய்து கொள்வது அவசியமாகிறது. இம்மதிப்பீடு ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஒரு வருவருடத்திற்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும். சுயமதிப்பீட்டினைக் கீழ்க்கண்ட அளவீடுகளைக் கொண்டு செய்யலாம்.

**மதிப்பெண்கள் வழங்கும் முறை**

சமுதாயத்தைச் சார்ந்த அமைப்புகள் அவைகள் செயல்படும் தன்மையினைப் பொறுத்து மதிப்பெண்கள் கீழ்க்கண்ட வகையில் வழங்கப்பட வேண்டும்.

| செயல்படும் தன்மைகள் | வழங்கப்படும் மதிப்பெண்கள் |
|---|---|
| மிக சிறப்பாகச் செயல்படல் | 5 |
| சிறப்பாக செயல்படல் | 4 |
| சுமாராகச் செயல்படல் | 3 |
| மோசமாகச் செயல்படல் | 2 |
| மிக மோசமாகச் செயல்படல் | 1 |

.:பெரல் நிறுவனம் என்பது ஒரு இலாப நோக்கற்ற அரசு சாரா நிறுவனமாகும். இதன் முக்கிய ஆணையானது சுற்றுப்புறவியல் ஆராய்ச்சியின் மூலம் இயற்கை வள மேலாண்மையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணு-தல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் தனிநபர், சமூகம் மற்றும் நிறுவனங்களின் திறனை வளர்ப்பது போன்றவைகளாகும்.

FERAL

ICEF

ஐ.சி.இ.எ.:ப். என்பது இந்தியா மற்றும் கனடா அரசின் வளர்ச்சித் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கமானது, நீடித்த தன்மையு-டைய நீர் மற்றும் நிலம் தொடர்பான வளர்ச்சித் திட்டங்களை நடைமு-றைப்படுத்தும் இந்திய அமைப்புகளின், அதாவது பொது மற்றும் தனியார் அமைப்புகளின் திறன்களை வளர்ப்பது ஆகும்.